மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 22/2023

பெயர் – காளியம்மாள் (பி.வா.சா.1)

நாள் – 24.01.2024

வாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

ஏழாயிரம்பண்ணை காவல் நிலையத்தில் தாவா சொத்து சம்மந்தமாக புகார் அளித்து விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். அந்த விசாரணையில் என்ன சொன்னார்கள் என்றால் தாவா சொத்து குருசாமியின் சொத்து என்று சொல்லிவிட்டார்கள். எனது கணவர் முருகனும், சகோதரியும், நானும் வாதியிடம் போய் தாவா சொத்தை கேட்டதால் தகராறு ஏற்பட்டதால் தான் காவல் நிலையம் சென்றோம் என்றால் சரிதான். வாதி தான் தகராறு செய்தார். வாதி தாவா சொத்தை எங்கள் வசம் ஒப்படைக்காத காரணத்தினால் தான் இந்த வழக்கு என்றால் சரிதான். தாவா சொத்திற்கான கதவு எண் என்ன என்றால் 152 என்று நினைக்கிறேன். எனக்கு படிப்பறிவு இல்லாத காரணத்தினால் சரியாக தெரியவில்லை. தாவா சொத்தில் உள்ள வீடுகள் இடிந்த நிலையில் உள்ளதால் மின்இணைப்பு இல்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கான நான்குமால் என்ன என்றால் தெற்குபுறத்தில் காளியம்மன் கோவிலும், வடக்குபுறத்தில் பிள்ளையார் கோவிலும், மேற்குபக்கத்தில் ஓடை உள்ளது, கிழக்குபக்கத்தில் ரோடு உள்ளது. எனக்கு தெற்கு வடக்கு தெரியாது. இடிந்து போன வீடுகளுக்கான வாசல் எந்த திசையை பார்த்து உள்ளது என்றால் தெற்கு பார்த்து உள்ளது. தாவா சொத்தை எனது தகப்பனார் காலத்திலிருந்து அனுபவம் செய்து வருவதற்கான தீர்வை ரசீது செலுத்த வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு தீர்வை செலுத்தியதாக ஆவணம் என் கைவசம் உள்ளதா என்றால் என் தகப்பனார் வைத்திருந்தார். அப்போது நான் சிறுபிள்ளை. தாவா சொத்தை நானே, எனது சகோதரியோ எனது தகப்பனாரோ அனுபவித்தது கிடையாது என்றாலும், அதனால் தாவா சொத்தை அனுபவம் செய்து வருவதாக எந்த ஒரு ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாதி வைத்து கொண்டு எங்களிடம் தரமறுத்தற்காக நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றால் இல்லை. எங்கள் சொத்து என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை. வாதியை தாவா சொத்திலிருந்து வெளியேற்றுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எங்கள்

சொத்து என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை. தாவா சொத்துக்கும் எங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், தாவா சொத்தை நாங்கள் ஒரு போதும் அனுபவித்தது கிடையாது என்றாலும், அதனால் தான் வாதி மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து உள்ள சங்கரபாண்டியாபுரம் கிராமத்திற்கு நான் எனது சகோதரியுடன் சென்ற போது வாதி தாவா சொத்தில் வேலி அமைத்து ஆடுகள் வளர்த்து வந்தார் என்றால் சரிதான். தாவா சொத்து வாதியின் தகப்பனாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு வாதியின் தகப்பனார் வாதிக்கு 13.08.2002 ம் தேதியில் ஒரு பதிவு செய்த தானசெட்டிமெண்ட் ஆவணத்தை பிறப்பித்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அது எங்களுடைய சொத்தாகும். அந்த தானசெட்டிமெண்ட்டின் அடிப்படையில் வாதி தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. அந்த சொத்தில் எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும், எவ்வித உரிமையும் இல்லாத நாங்கள் வாதி தாவா சொத்தை அனுபவம் செய்து வருவதை இடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் பெயருக்கு அரசு வழங்கியுள்ளதாக சொல்லப்படும் பட்டா மோசடியானது என்றால் சரியல்ல. வாதி மற்றும் வாதியின் தகப்பனாரை முறையாக விசாரணை செய்யாமல் வருவாய்துறை ஆவணங்களில் தவறாக எனது தகப்பனார் பெயரில் ஆவணங்கள் பதிவாகியுள்ளது என்றால் சரியல்ல. எனவே வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.